මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No:
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.03.01

சுற்று நிருப இல : DFD/ 2023-1 (II)

செயலாளர், பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்

**2022/23 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித் திட்டம்**

**2023 ஆம் ஆண்டு மாசி மாதம் அதிகரித்த மின் கட்டணங்களை கருத்திற்கொண்டு சுற்றுநிருப திருத்தத்தை வெளியிடல்**

மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்களினூடாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்புக்களை அரிசியாக்குதல் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட DFD/2023-1 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2023.02.09 ஆம் திகதிய சுற்றறிக்கை தொடர்பானது.

2023 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்தத்துடன், நெல் கையிருப்புக்களை அரிசியாக்கும் போது ஏற்படும் உற்பத்திச் செலவு அதிகரிப்பினைக் கருத்திற் கொண்டு, 2022/23 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஈர நெல்லை உலர்த்துவதற்கான கட்டணம் மற்றும் நெல் குற்றுதல் கட்டணம் என்பன அதிகரிப்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி, புதிய மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் பிரகாரம், ஈர நெல்லை உலர்த்துதல் மற்றும் நெல் குற்றுதல் தொடர்பான செலவுகளை பகுப்பாய்வு செய்த பின்னர், மேலே குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் 2.3.5 மற்றும் 3.1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

1. 2.3.5 இல் குறிப்பிட்டுள்ள, ஈரப்பதன் 14% சதவீதத்தினை விஞ்சிய அதேநேரம் ஈரப்பதன் 22% அல்லது அதற்குக் குறைவான நெல் கிலோ ஒன்றுக்கு, உரிய தரத்திற்கு நெல்லினை உலர்த்துவதற்கான செலவாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு செலுத்தப்படும் ரூ. 4.50 ஆன தொகை ரூ. 4.75 ஆக திருத்தப்படுகின்றது.

2. 3.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நெல்லை அரிசியாக்கும் போது ஏற்புடையாகும் கட்டணங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

| இலக்கம் | அரிசி வகை | வழங்கும் அதிகபட்ச தொகை (ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா.) |
|---|---|---|
| 1 | வெள்ளை நாடு (அவிக்கப்பட்டது) | 10.70 |
| 2 | சிவப்பு நாடு (அவிக்கப்பட்டது) | 10.70 |
| 3 | வெள்ளைப் பச்சை | 8.75 |
| 4 | சிவப்புப் பச்சை | 8.75 |

இதன் பிரகாரம், 2022/23 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது இந்த திருத்தப்பட்ட கட்டணங்களை அமுல்படுத்துவதற்கு அனைத்து மாவட்டச் செயலர்களும்/ அரசாங்க அதிபர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஒப்பம்/ கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் – தகவலுக்காக.
2. செயலாளர், கமத்தொழில் அமைச்சு – தகவலுக்காக.
3. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
5. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
6. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
7. ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
8. பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் - நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான பாதுகாப்பினை வழங்குவதற்காக.
9. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம் – தகவலுக்காக.